**ஜூலை - 1**

**"வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்; கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்." - எபே 5 : 8, 10.**

சத்தியத்தினால் தேவனுக்கு நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தால், அதாவது, நமது சித்தங்கள் செத்திருந்து, எண்ணத்திலும், வார்த்தையிலும், செயலிலும் நமது கர்த்தரின் சித்தம் முழுவதுமாக நம்முடையதாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், நாம் தேவனுடைய சித்தத்தைப் பெற்றிருக்கிறோம். ஆகையால், சந்தர்ப்பங்கள் நமக்கு மறுக்கப்பட்டாலும், நாம் ஒருபொழுதும் பிரசங்கம் செய்யாதிருந்தாலும் ஒருபொழுதும் ஏழைகளுக்குக் கொடுக்காதிருந்தாலும், சத்தியத்தினிமித்தம் ஒருபொழுதும் தியாகிகளாக துன்பப்படாதிருந்தாலும் "ஜெயங்கொண்டவர்களாக" பரிசைப் பெறுவோம். நாம் எல்லோரும் இந்த முக்கிய விஷயத்தை நன்றாகக் கவனிப்போமாக. "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே (உங்கள் சம்பந்தமாக) தேவனுடைய சித்தமாயிருக்கிறது." மற்ற சத்தியங்களோ அல்லது வஞ்சகங்களோ ஒன்றும் இந்தச் சத்தியத்தை மறைக்கவோ அல்லது மங்கலாக்காதிருப்போமாக. ஜீவியத்தின் போக்கை இது ஆதிக்கம் செலுத்துவதாக. அப்பொழுது, உண்மையாகவே தேவனுடைய சித்தம் நம்முடைய சித்தமாயிருக்குமானால், நம்முன்னால் தெளிவாய் நன்கு புலப்படக்கூடிய மிகவும் முக்கியமான ஒரு வழி இருக்கிறது. **- Z '99, 4(R 2411)**

சத்தியத்தைப் பெற்றிருக்கிற தேவனுடைய பிரதிஷ்டை செய்திருக்கிற ஜனங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நடத்தையை தேவனுடைய வார்த்தையின் உபதேசங்களுக்கும், கட்டளைகளுக்கும், வாக்குத்தத்தங்களுக்கும், புத்தி சொல்லுதலுக்கும், தீர்க்கதரிசனங்களுக்கும், சரித்திரங்களுக்கும், அடையாளங்களுக்கும் ஒவ்வச் செய்கிறார்கள். கர்த்தருக்கு எது பிரியமானதாக இருக்கிறதென்று தெரிந்துகொண்டு, பிறகு அதை செய்யத்தக்கதாக, அவர்கள் இடைவிடாமல் வார்த்தையைத் தியானித்து, தங்களுடைய ஜீவியத்தின் சூழ்நிலைகளுக்கு அதன் தத்துவங்களை உபயோகிக்க நாடுகின்றனர். **- P '26, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**மத் 5:14-16; யோவா 12:46; 2கொரி 4:6; 1தெச 5:5; 1யோவா 1:7; 2:6,9,10;ரோம 12:2; 13:13; எபே 5:2; 5:17; 1தெச 4:3; 5:24; பிலி 1:10; 1தீமோ 2:3.**

**கோபுர வாசிப்பு : Z '14, 126 (R 5446).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் வெளிச்சத்தின் பிள்ளையாக எனது மனம், நோக்கம், எண்ணங்கள், வார்த்தைகள், செயல்கள் ஆகியவற்றை நிரூபிக்க முயன்றேனா? எப்படி? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன்கள் என்ன?**